**(சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**ஓ.எஸ்.எண். 41/2021** **நாள்.09.09.2025**

2025ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 09 நாள் வாதி தரப்பு 1 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமார்(எ) செல்வகுமார் | தொழில் | |
| த. பெ./க.பெ. | நடேசன் | சாதி | |
| கிராமம் | ஏதாநெமிலி | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 57 |

**வ.சா.1**

**குறுக்கு விசாரணை**

நடேச கவுண்டருக்கு 4 மகன்கள். 1. சண்முகம்,2. ஆறுமுகம், 3. மாரிசாமி மற்றும் 4. நான். 3 பெண் பிள்ளைகள். 1. தனலட்சுமி, 2. பரிமளா, 3. மஞ்சுளா. 8-ம் பிரதிவாதி ஆறுமுகத்தின் மகள். என் அப்பாவின் தகப்பனார் பெயர் மொட்டைகவுண்டர். மொட்டையனின் தந்தை பெயர் ராமசாமி. நான் ராமசாமியை பார்த்ததில்லை என்றால் சரிதான். வழக்கில் கண்ட சொத்து எதற்கும் ராமசாமி பெயரில் பத்திரம் இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களின் சில மொட்டைய கவுண்டர் சம்பாதித்தவை. மற்றவை என் தந்தை நடேசன் சம்பாதித்தவை. மொட்டைய கவுண்டரின் உடன் பிறந்தோர் 4 பேர். 1. டாக்கு,2. மொட்டையன், 3. முனுசாமி, 4. ஐய்யம்பெருமாள். வழக்கு சொத்துக்கள் அனைத்தும் தனியல் மற்றும் ஏதாநெமிலி கிராமங்களில் உள்ளன என்றால் சரிதான். மொட்டைய கவுண்டரின் பூர்வீகம் கீழ்மாவிளங்கை கிராமம். மொட்டையன் மனைவியின் சொந்த ஊர் ஏதாநெமிலி. திருமணத்திற்கு பிறகு மொட்டையன் மாமியார் ஊரில் தங்கிவிட்டார். நான் மொட்டைய கவுண்டரை பார்த்துள்ளேன். அவர் 1987-ம் ஆண்டு இறந்தார். வழக்கு சொத்துக்களின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. ஏதாநெமிலி எல்லையில் 6 ½ ஏக்கர் மற்றும் தனியல் எல்லையில் சுமார் 7 ஏக்கர் சொத்திற்கும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் 5-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எழுத படிக்க தெரியும். வழக்கு 4 மற்றும் 8 அயிட்ட சொத்துக்களில் பகுதியை மொட்டைய கவுண்டர் ஒரு முனியன் என்பவரிடம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அந்த கிரையம் வாங்கும்போது நான் பிறக்கவில்லை. 1964-ல் அந்த கிரையம் பெறப்பட்டதா என்றால் நினைவில்லை. பதிலுரை விபரங்களை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் என்ன சொல்லி வழக்காடுகிறார்கள் என்று தெரியாது. மொட்டையனுக்கு என் தந்தை ஒரே ஆண்மகன். முனியனிடம் வாங்கிய சொத்து சம்பந்தமாக எந்த ஏற்பாடும் செய்யாமல் அச்சொத்தை மகனிடம் விட்டுவிட்டு மொட்டையன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அந்த சொத்தை ஒரே ஆண்மகன் என்ற வகையில் என் தந்தை கைப்பற்றி அனுபவித்து வந்தார் என்றால் சரிதான்.

மொட்டையன் மனைவி பெயர் சீட்டை (எ) பார்வதி என்றால் சரிதான். தாவா 1 மற்றும் 2 அயிட்ட சொத்துக்களை என் தாத்தா பொன்னுசாமி மற்றும் முனிபத்திரன் ஆகியவரிடம் கிரையம் வாங்கினார். 1961 ல் மேற்கண்ட கிரையத்தை மொட்டையன் வாங்கினார். மொட்டையன் கிரையம் வாங்கிதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. அந்த சொத்துக்களை நடேசம் மற்றும் முனுசாமி ஆகியோர் பொன்னுசாமி வகையராவிடமிருந்து கிரையம் பெற்றார்கள் என்றால் சரியல்ல. (சாட்சி மீண்டும் அந்த கிரையம் ஆவணம் நடேசன் மற்றும் முனுசாமி பெயரில் தான் உள்ளது என கூறுகிறார்.)

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோள் கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.**